நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

அனுப்புநர்

திருமதி.T.லீனா சைமன்,பி.எஸ்.சி,
ஆணையாளர்,
நெல்லியாளம் நகராட்சி,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
எண்.5, ஜே.ஜி.நகர் முதல் தெரு,
குமாரனந்தபுரம்,
திருப்பூர்.2

ந.க.எண்.513/2020/அ2, நாள்.02/04/2020

அம்மையீர்,

பொருள் – நிர்வாக அறிக்கை – நெல்லியாளம் நகராட்சி – 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை – 1) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3586/2018/பி2, நாள்.18/03/2020.

2) தீர்மானம் எண்.46/2020, நாள்.31/03/2020.

******* *******

நெல்லியாளம் நகராட்சியின் 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தனி அலுவலரின் அனுமதி பெற்று இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2/4/2020

ஆணையாளர்
நெல்லியாளம் நகராட்சி

இணைப்பு : நிர்வாக அறிக்கை

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

31/03/2020 ஆம் தேதியன்று நெல்லியாளம் நகராட்சியில் நடைபெற்ற சதாரணக் கூட்டத்தின் நடவடிக்கையின் உண்மை நகல்

பொருள்.

நெல்லியாளம் நகராட்சியின் **2018–2019** ஆம் ஆண்டிற்க்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண். 46/2020 நாள்.31/03/2020

அங்கீகரிக்கப்பட்டது

(ஓம்) திருமதி.T.லீனா சைமன்,பி.எஸ்.சி
ஆணையாளர்/தனி அலுவலர்,
நெல்லியாளம் நகராட்சி,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

// உண்மை நகல் //

ஆணையாளர் 2/4/2020
நெல்லியாளம் நகராட்சி

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

அமைப்பும் நிர்வாகமும் :

நெல்லியாளம் மூன்றாம் நிலை நகராட்சி, சென்னை உள்ளாட்சி ஆய்வாளர் அவர்களின் சுற்றறிக்கை எண்.79932/32 நாள். 30.1.33ன்படி ஊராட்சியாக அமைக்கப்பட்டது. மேலும் கூடுதல் ஊராக வளர்ச்சி ஆணையர், சென்னை அவர்களின் செயல் நடவடிக்கை ந.க.எண். 4981/60 நாள். 12.9.1961ன்படி இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. கூடுதல் ஊரக வளர்ச்சி ஆணையர், சென்னை அவர்களின் செயல் நடவடிக்கை கடிதம் ந.க.எண். 13514/63 நாள். 29.3.1963ல் முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தியும், பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் உத்திரவு எண். 4199/85/ஜே5 நாள். 13.3.1985ன்படி தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் அரசு கடிதம் ந.க.எண். 20557/தே/2004–1/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 11.6.04ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக 14.6.2004 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் அரசு ஆணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)த் துறையின்படி 09/08/2010–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு கடந்த 09.08.2010 முதல் இயங்கி வருகிறது.

மேலும் நகராட்சியின் அதிகார வரம்பில் மாற்றம் இல்லை.

கூட்டங்கள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் 12 சாதாரணக் கூட்டங்களும், 3 அவசர கூட்டமும், நடத்தப்பட்டு 190 தீர்மானங்கள் விவாதித்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

குழுக்கள்

நகராட்சியில் உள்ள குழுக்கள்

1. நியமனக் குழு

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

பணியாளர்குழு

பொதுப்பிரிவு		பொறியியல் பிரிவு		நகரமைப்பு பிரிவு		பொது சுகாதாரப்பிரிவு	
ஆணையாளர்	1	நகராட்சி பொறியார் நிலை III	1	நகரமைப்பு ஆய்வாளர்	1	துப்புரவு ஆய்வாளர்	1
மேலாளர்	1	பொதுப்பணி மேற்பார்வையாளர்	1			ஓட்டுநர்	1
உதவியாளர்	1	பணி ஆய்வர்	1			துப்புரவு பணியாளர்கள்	10
இளநிலை உதவியாளர்	3	பொருத்துநர்	3				
வருவாய் ஆய்வாளர்	1	குடிநீர் விநியோக உதவியாளர்	4				
வருவாய் உதவியாளர்	1	மின்பணியாளர்	1				
ஓட்டுநர்	1	மின்பணி உதவியாளர்	1				
அலுவலக உதவியாளர்	1						
பதிவறை எழுத்தர்	1						
இரவு காவலர்	1						
சமுதாய அமைப்பாளர்	1						
புள்ளி விவரகுறிப்பாளர்	1						
மொத்தம்	14		12		1		12

இதில் சமுதாய அமைப்பாளர், புள்ளிவிவர குறிப்பாளர், பதிவறை எழுத்தர் மற்றும் பணி ஆய்வர் ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது.

சாலைகள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் 140.00 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகிறது.

1.	சிமெண்ட் கான்கீரிட் சாலை	–	42.12	கி.மீ.
2.	தார் சாலை	–	82.00	கி.மீ.
3.	மண் சாலை	–	3.05	கி.மீ.
4.	நடைபாதைகள்	–	13.15	கி.மீ.
	மொத்தம்	–	140.32	கி.மீ.

மண் மற்றும் கல் சாலைகள் படிப்படியாக தார் சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

தெருவிளக்குகள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் பின்வருமாறு உள்ளது.

1.	LED விளக்குகள்	–	1048
2.	சோடியம் ஆவி விளக்குகள்	–	111
3.	உயர்மின் கோபுர விளக்குகள்	–	4
4.	சி.எப்.எல் விளக்குகள்	–	59
5.	குழல் விளக்குகள்	–	80
	மொத்தம்	–	1302

குடிநீர் ஆதாரம்

நகராட்சியில் உள்ள 110 திறந்தவெளி கிணறுகள், மேல்நிலை தொட்டி 2 எண்ணிக்கை, தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் 79 எண்ணிக்கைகள் மற்றும் 9 தடுப்பணைகள் ஆழ்துளை கிணறுகள் மற்றும் டீசல் எஞ்சின் 10 எண்ணங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது இந்நகராட்சியில் தடுப்பணையிலிருந்து 1.812 MLD, திறந்தவெளி கிணற்றிலிருந்து 2.285 MLD ஆழ்துளை கிணற்றிலிருந்து 0.003 MLD குடிநீர் விநியோகம் பெறப்படுகிறது. மேற்கண்ட ஆதாரங்களின் மூலம் கிடைக்க பெரும் குடிநீரின் விநியோக அளவு 4.10 MLD நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 LPCD வீதம் தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுகிறது.

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

கல்வி

இந்நகராட்சியின் பராமரிப்பில் எவ்விதமான கல்வி நிலையங்கள் ஏதுமில்லை. இந்நகராட்சியின் எல்லைக்குள் அரசு மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் கீழ்காணும் விபரப்படி செயல்பட்டு வருகிறது.

1.	மேல்நிலைப் பள்ளிகள்	–	1
2.	உயர்நிலைப் பள்ளிகள்	–	4
3.	நடுநிலைப் பள்ளிகள்	–	3
4.	ஆரம்ப பள்ளிகள்	–	13
5.	கலை கல்லூரி	–	1
	மொத்தம்	–	22

சத்துணவு திட்டம்

இந்நகராட்சியின் பராமரிப்பில் சத்துணவுத் கூடங்கள் ஏதுமில்லை. இந்நகராட்சியின் எல்லைக்குள் 20 சத்துணவுக் கூடங்களும் 18 பால்வாடிகளும் செயல்பட்டு வருகிறது.

பொது நூல் நிலையம்

இந்நகராட்சியின் பராமரிப்பில் நூல் நிலையம் ஏதுமில்லை. பொது நூலகத்துறை மூலம் பந்தலூரில் ஒரு பொது நூலகம் இயங்கி வருகிறது.

பொது நலம்

இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் மருத்துவமனைகள் ஏதும் இல்லை. இந்நகராட்சியின் எல்லைக்குள் 1 பொது மருத்துவமனை உள்ளது. மேலும் 2 தனியார் மருத்துவமனைகளும் இயங்கி வருகிறது.

அறிக்கையாண்டில் 01 பிறப்பும் 245 இறப்புகளும் இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குடும்ப நலம்

அறிக்கையாண்டில் இந்நகராட்சி குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

துப்புரவு

அறிக்கையாண்டில் இந்நகராட்சிப் பகுதியில் உள்ள 11238 குடியிருப்பு வீடுகளில் 8760 வீடுகளில் கழிப்பறைகள் உள்ளது. கழிப்பிட வசதியற்ற குடியிருப்புகளுக்கு தற்பொழுது தூய்மை இந்தியா திட்டத்தின் வாயிலாக 753 வீடுகளுக்கு ரூ.8000/- மானியத்தில் கழிப்பறை கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

உணவு கலப்பட தடைச்சட்டம்

இந்நகராட்சியில் மாவட்ட FSSAI துறையில் மேற்கொள்ளப்படுகிறது.

அச்ச மற்றும் அருவருக்கத்தக்க இனங்கள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் 249 உரிமக்கட்டண விண்ணப்பங்கள் பெறப்பட்டு ரூ.508343/– வசூலிக்கப்பட்டது.

தொழில் வரி

இந்நகராட்சியில் அறிக்கையாண்டில் 598 வரிவிதிப்புகளுக்கு தொழில்வரி கேட்பு ரூ.25.58/– லட்சம் நிர்ணயம் செய்து ரூ.24.62/– லட்சம் வசூலிக்கப்பட்டது.

கலவை உரம்

இந்நகராட்சிக்குட்பட்ட ஏலமன்னா பகுதியில் 5.02 ஏக்கர் பரப்பளவில் உரக்கிடங்கு உள்ளது. மேற்படி உரக்கிடங்கில் மண்புழு உரம் மற்றும் இயற்கை உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

குடிநீர் விநியோகம்

நெல்லியாளம் நகராட்சியில் 730 தனியார் குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும் குடிநீர் கட்டணமாக ரூ.4.33/– லட்சம் ஆண்டு கேட்பாக உள்ளது. இந்த ரூ.4.32/– லட்சம் கேட்பு முழுமையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

பயன்தரும் இனங்கள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பயன்தரும் இனங்களின் கீழ் வருமானம் பின்வருமாறு உள்ளது .

1. வணிக வளாகம் – 1424104/–
2. கட்டண கழிப்பிடம் – 150836 /–

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

நிதி

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் கேட்பு, வசூல், நிலுவை விவரம்.

வரியினங்கள் :– ரூ. லட்சத்தில்

அறிக்கையாண்டில் வரியினத்தின் கேட்பு	–	157.80
அறிக்கையாண்டின் வரியினத்தின் வசூல்	–	110.37
அறிக்கையாண்டின் வரியினத்தின் நிலுவை	–	47.44
வசூல் சதவீதம்	–	70.00 %

வரியில்லா இனங்கள் :–

அறிக்கையாண்டின் வரியில்லா இனத்தின் கேட்பு	–	20.75
அறிக்கையாண்டின் வரியில்லா இனத்தின் வசூல்	–	15.56
அறிக்கையாண்டின் வரியில்லா இனத்தின் நிலுவை	–	5.19
வசூல் சதவீதம்	–	74.99 %

நிலுவையாக உள்ள வரி மற்றும் வரியில்லா இனங்கள் முழுமையாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிதி நிலைமை

01/04/2018 ஆரம்ப இருப்பு ரூ – 38714394.56/-
31/03/2019 முடிவு இருப்பு ரூ – 75999358.06/-

தணிக்கை

அறிக்யைாண்டில் 64 தணிக்கை தடைகள் நிலுவையாக இருந்தது. மேற்படி தணிக்கை தடைகளில் 24 தணிக்கைத் தடைகளுக்கு பதில்கள் தயார் செய்யப்பட்டு தணிக்கை கூட்டமர்வில் நிவத்தி செய்யப்பட்டு தற்போது 40 தணிக்கைத் தடைகள் மட்டுமே நிலுவையாக உள்ளது. மேற்படி பத்திகளுக்கு பதில்கள் தயார் செய்யப்பட்டு நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

கடன்

நடப்பு ஆண்டில் கடன் தொகை நிலுவை ஏதும் இல்லை.

சிறுசேமிப்பு திட்டம்

அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சிறுசேமிப்பு குறியீடு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

பொது

இந்நகராட்சிக்கு குப்பைகள் கொட்ட 5.02 ஏக்கர் நிலம் உள்ளது. நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது.

வணிக வளாகத்தில் 37 கடைகள் உள்ளது. இதில் இந்தியன் வங்கி ரூ.18524/–க்கும் அஞ்சலகத்திற்க்கு ரூ.4667/– மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மீதம் உள்ள கடைகளும் ஏலம் விடப்பட்டுள்ளது.

பணிகள்

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்	செலவிடப்பட்ட தொகை ரூ.லட்சத்தில்
1.	சீனக்கொல்லியில் சிமெணட் சாலை அமைத்தல் வார்டு எண்.5	4.00	4.00
2	தேவாலா அட்டி சர்ச் முதல் லேபர் குடியிருப்பு சிமெணட் சாலை அமைத்தல்	4.00	4.00
3	பாண்டியார் ரேஞ் 4 பி தார் சாலை அமைத்தல்	10.00	10.00
4	பள்ளி வாசல் சிமெண்ட் சாலை அமைத்தல் வார்டு எண்.14	5.00	5.00
5	மேங்கோரேஞ் சர்ச் மயானத்திற்கு சிமெண்ட் சாலை அமைத்தல்	2.00	2.00
6	இரும்புபாலம் சிமெண்ட் சாலை அமைத்தல்	4.00	4.00
7	பொன்னூர் காலனியில் சிமெண்ட் நடைபாதை அமைத்தல்	1.00	1.00
8	கீழ்நாடுகாணி கால்வாய் அமைத்தல்	2.00	2.00
9	தேவாலா ஆட்டோ ஸ்டேன் அருகில் கால்வாய் அமைத்தல்	1.00	1.00

10	அண்ணாநகர் காலனி குடிநீர் திட்டம் அமைத்தல்	4.00	4.00
11	பந்தலூர் அரசு மருத்துவமனையில் சிமெணட் சாலை அமைத்தல்	4.00	4.00
12	புஞ்சவயல் ஒலிமடா நடைபாதை அமைத்தல்	3.00	3.00
13	திருவள்ளுவர் நகர் மயான மேடை அமைத்தல்	3.00	3.00

பாரளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்	செலவிடப்பட்ட தொகை ரூ.லட்சத்தில்
1.	காட்டிமட்டத்தில்அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல்	10.00	10.00

சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம் 2018 – 2019

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்	செலவிடப்பட்ட தொகை ரூ.லட்சத்தில்
1.	புஞ்சவயல் மெயின் சாலை முதல் ஆதிதிராவிடர் காலனியில் சிமெணட் சாலை மற்றும் பக்கசுவர் அமைத்தல்	8.80	8.80
2	பந்தலூர் முதல் ரிச்மெணட் தொழிலாளர் குடியிருப்பு சிமெணட் சாலை அமைத்தல்	8.00	8.00
3	தேவாலா அட்டி முதல் கைலாசம் காலனி சிமெணட் சாலை அமைத்தல்	8.90	8.90

சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம் (Naxal / Maoist) 2018 – 2019

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்	செலவிடப்பட்ட தொகை ரூ.லட்சத்தில்
1.	மூச்சுக்குன்னில் தார் சாலை அமைத்தல்	30.00	30.00

நெல்லியாளம் நகராட்சி – நீலகிரி மாவட்டம்
நிர்வாக அறிக்கை

ஆதிதிராவிடர் நலவாரிய திட்டம் 2018 – 2019

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்	செலவிடப்பட்ட தொகை ரூ.லட்சத்தில்
1.	இன்கோநகர் ஆதிதிராவிடர் காலனிக்கு சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்கு அமைத்தல்	5.75	5.75

TURIF திட்டம் 2018 – 2019

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்	செலவிடப்பட்ட தொகை ரூ.லட்சத்தில்
1.	தேவாலா அட்டி சாலை வார்டு எண். 10,11 & 4, கண்ணடியன்பாடி முதல் சேலக்குன்னா சாலை வார்டு எண்.2, கரியசோலை முதல் சேலக்குன்னா சாலை வார்டு எண்.1, சேலக்குன்னா முதல் பொன்னம்மா பள்ளம் வார்டு எண்.1, மற்றும் கொளப்பள்ளி முதல் உப்பட்டி புஞ்சவயல் சாலை வார்டு எண்.18,19ல் ஆகிய சாலைகளை மேம்பாடு செய்தல்	300.00	300.00

2/4/2020

ஆணையாளர்
நெல்லியாளம் நகராட்சி